க.பொ.த. உயர் தரம்

தரம் 12, 13

# அறபு மொழி

## பாடத்திட்டம்

(2009 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்)

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞானபீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# 1.0 அறிமுகம்

இலங்கையுடன் அரேபியர் வணிகத்தெடர்பு கொண்டிருந்த காலம் முதல் அறபு மொழி இலங்கையில் அறிமுகமாகியது எனலாம். அறபு மொழி செமித்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பண்டைய மொழியாகும். எனினும் அது இன்று வரை வளர்ந்து வரும் மொழியாகவே உள்ளது. அது ஒரு வளமான மொழியாகும்.

இன்று உலகில் 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் அறபு மொழியை தேசிய மொழியாக கொண்டுள்ளன. ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் அது பயிலப்பட்டு வருகிறது. உலக மக்களில் நாலிலொருவர் அறபு மொழியுடன் பரிச்சயமுடையவராகக் காணப்படுகிறார். சர்வதேச மொழிகளிலொன்றான அறபு மொழி உலகின் பிரசித்தமான பல்கலைக் கழகங்களிலெல்லாம் கற்பிக்கப்படுவதோடு, அறபு மொழி ஆய்வுக்கான பீடங்களையும் வைத்துள்ளன.

பண்டைய துருக்கி, பார்ஸி, உருது, மலாய் போன்ற மொழிகளும் மாலைத் தீவு, இந்தோனேசியா போன்ற நாடுகளில் வழங்கி வரும் மொழிகளும் அறபு லிபியிலேயே இடம் பெறுகின்றன. இலங்கையில் வழக்கிலுள்ள அறபுத் தமிழ் கூட அறபு லிபியிலேயே உள்ளது.

இலங்கையில் 1938 ஆம் ஆண்டிலிருந்து அறபு மொழி அரசாங்கப் பாடசாலைகளில் கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதற்கு முன்னர் மத்ரஸா எனும் அறபுக் கலாபீடங்கள் 1880 களில் ஆரம்பிக்கப்பட்டு அறபு மொழி பயிலப்பட்டது. இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் 1945 முதல் அறபு மொழி கற்பதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றன.

எனினும் அறபு மொழி இஸ்லாமிய கலாசார மொழியாக கருதப்பட்டதால் அது முஸ்லிம்களின் கலாசார மொழியென இலங்கை மக்கள் நம்பி வந்தனர். 1970 களின் பிற்கூறில் மத்திய கிழக்கில் கிடைக்கப்பெற்ற வேலை வாய்ப்புக்கள் அறபு மொழி பயில்வதற்கான தூண்டுதலை அதிகரிக்கச் செய்தது.

தற்போது நடைமுறைக்கு வரப்போகும் கலைத்திட்டத்தில் அறபு மொழி செம்மொழியாக அங்கீகாரம் பெற்று அனைவரும் கற்பதற்கான வாய்ப்புக்கள் கொடுக்கப்படுகின்றன. எனவே மொழித் திறன்கள் நான்கையும் பெற்றுக் கொள்ளும் வகையில் க.பொ.த உயர்தர பரிட்சைக்கான புதிய அறபு மொழி பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நவீன கற்றல் உத்திகளையும் உபகரணங்களையும் கையாண்டு கற்றல் கற்பித்தலில் ஈடுபடும் போது சிறந்த பயனைப்பெறலாம் என நம்புகிறோம்.

# தவணைக்குரிய தேர்ச்சிகள்

## க.பொ.த. உயர் தரம்

## அரபு

**தரம் 12**

| தவணை | தேர்ச்சி மட்டம் | பாட வேளை |
|---|---|---|
| I | 1.1, 1.2, 3.1, 3.3, 4.1, 5.1 | 100 |
| II | 2.1, 2.2, 6.3, 7.1 | 100 |
| III | 3.2, 5.3, 7.3 | 100 |

**தரம் 13**

| தவணை | தேர்ச்சி மட்டம் | பாட வேளை |
|---|---|---|
| **I** | 4.2, 5.2, 7.2, 8.1 | 100 |
| II | 8.3, 9.1, 9.2, 9.3, 9.4, 10.1, 10.2 | 100 |
| III | 6.1, 6.2, 6.4, 7.4, 8.2 | 100 |

## 2.0 பாடக் குறிக்கோள்

1. அறபு மொழியில் பேசவும் பேசப்படுபவற்றை விளங்கவும் தகைமை பெறுதல்.

2. அறபு மொழியிலான எழுத்தாக்கங்களை வாசிக்கவும் அறபு மொழியில் ஆக்கங்களை புனையவும் திறமை பெறுதல்.

3. அறபு மொழி ஆக்கங்களை சுய மொழியிலும் சுயமொழி ஆக்கங்களை அறபு மொழியிலும் பெயர்க்கும் திறனைப் பெறுதல்.

4. அறபு இலக்கிய ஆக்கங்களை வாசித்து நயக்கும் திறனைப் பெறுதல்.

5. கல்வி,கலாசார, ஆய்வு மற்றும் சமூக உறவுகளுக்காக அறபு நாடுகளுடன் தொடர்பு கொள்வதற்கான ஊடகம் என்ற வகையில் அறபு மொழியில் தேர்ச்சி பெறுதல்.

6. அறபு இலக்கியப் பின்னணியில் அமைந்த கலாசார,விழுமியப் பெறுமானங்களை மதித்து கௌரவிக்கும் பண்பைப் பெறுதல்.

பாடத்திட்டம் - தரம் 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **1.0 அறபு மொழி அரிச் சுவடியை இனங்கண்டு தொனியை பகுத்தறிந்து உச்சரித்தும் எழுதியும் வருவார்** | 1.1 தொனிவேறுபாட்டை உணர்ந்து சரியாக உச்சரிப்பார் | • தமிழ் மொழியுடன்இணக்கமான ஒலியுடைய எழுத்துக்கள் (10)<br>உ-ம் : அ (ا),த(ت),ற(ر)<br>• சிங்கள மொழியுடன் இணக்கமான ஒலியுடைய எழுத்துக்கள் (5)<br>உ-ம் : ජ (ج),හ (ه),ද (د)<br>• ஆங்கில மொழியுடன் இணக்கமான ஒலியுடைய எழுத்துக்கள்(3)<br>உ-ம்: B (ب), Z (ز), S (س)<br>• அம்மொழிகளில் காணப்படாத ஒலியுடைய எழுத்துக்கள் (10)<br>உ-ம்: خ ق ط غ<br>• அஷ்ஷம்ஸிய்யா, அல் கமரிய்யா | 05 |
| | 1.2 வரி வடிவத்தை இனங்கண்டு எழுதுவார் | • வலமிருந்து இடமாக எழுதும் ஒழுங்கு<br>• இலகுவாகவும் கிரமமாகவும் எழுதக் கூடிய எழுத்துக்கள்<br>உ-ம் 1: ا ب ت ث<br>உ-ம் 2: ص ح<br>• எழுத்துக்களை பிணைத்து எழுதும் முறை | 05 |
| **2.0 செவிமடுத்து கருத்தை விளங்கி துலங்குவார்** | 2.1 கேட்டு கிரகித்தவற்றை கூறுவார் | • அறிவித்தல்<br>-சந்தர்ப்பம்,இடங்கள் தொடர்பானவை<br>• விசாரணைகள்<br>-விலை, இடம்,நபர், நேரம் தொடர்பானவை<br>• கட்டளைகள்<br>-மரியாதை,எச்சரிக்கை தொடர்பானவை | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 2.2 கேட்டல் மூலம் சொற் களஞ்சியத்தை விரிவு படுத்துவார் | • அரும்பதங்கள்<br>• உவமைகள்<br>• பழ மொழிகள்<br>• மரபுச் சொற்கள்<br>• செய்திகள்<br>• கலந்துரையாடல்கள் | 30 |
| **3.0 திருத்தமான உரையாடலில் ஈடுபடுவார்** | 3.1 தன்னை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவார் | • பெயர்,ஊர்,வயது,நாடு,தாய்மொழி, பெற்றோர்<br>• வினாக்களுக்கு விடையளித்தல் | 25 |
| | 3.2 உணர்வுகளும் கருத்துக்களும் வெளிப்பட உரையாடுவார் | • பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தல்<br>• பாவனை செய்து பேசுதல்<br>• வானொலி,தொலைக்காட்சி அறிவிப்பு<br>• விளம்பரங்கள் | 25 |
| | 3.3 தலைப்புக் கேற்ப உரையாடுவார் | • குறிப்பிட்ட தலைப்புக்களில் பேசுதல்<br>உ-ம்: எனது கிராமம்,எனது பாடசாலை, எனது தாய் நாடு | 30 |
| **4.0 வாசித்து கருத்தை விளங்கி மற்றவர்களுக்கும் வாசித்துக் காட்டுவார்** | 4.1 பொருளுக்கேற்ற உணர்ச்சியோடு வாசிப்பார் | • குறிக்கப்பட்ட உரைப்பகுதியை வாசித்தல்<br>• குறிக்கப்பட்ட கவிதைகளை வாசித்தல் | 20 |
| | 4.2 பல்வேறு நோக்கங்களுக்காக வாசிப்பார் | • நடைமுறைத் தேவைகளுக்காக வாசித்தல்<br>• ஆக்கத்திறனை மேம்படுத்த வாசித்தல்<br>• மொழித்திறன் விருத்திக்காக வாசித்தல்<br>• சொற்களஞ்சியத்தை பெருக்க வாசித்தல்<br>• பயன்பாட்டு இலக்கணத்தை பிரயோகிப்பதற்காக வாசித்தல் | 35 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **5.0 எழுத்தாக்கங்களில் ஈடுபடுவார்** | 5.1 பார்த்தும் கேட்டும் எழுதுவார் | • பிரதி பண்ணி எழுதுதல்<br>• சொல்வதெழுதல்<br>• சொல்வதைக் கேட்டு கிரகித்து எழுதுதல்<br>• எழுத்து பொறிமுறைகளை கையாண்டு(உயிர்க் குறியீடுகள் உட்பட) எழுதுதல் | 15 |
| | 5.2 கேட்டும் வாசித்தும் கிரகித்தவற்றை குறிப்பெடுத்து எழுதுவார் | • சுருக்கக் குறிப்பெடுத்தல்<br>• ஆசிரியர் கூறுவதைக் கேட்டு பின்னர் சுயமாக எழுதுதல்<br>• கவிதைகளை வாசித்து அதன் கருத்தை உரை நடையில் எழுதுதல | 30 |
| | 5.3 இலக்கண வழுவின்றி தெளிவாகவும் சரியாகவும் எழுதுவார் | • பின்வரும் இலக்கணங்களை விளங்கி எழுதுதல்<br>• பெயர்ச்சொல்,வினைச்சொல்,ஒருமை-பன்மை,இருமை,ஆண்பால்-பெண்பால், தன்மை, முன்னிலை படர்க்கை<br>• காலங்கள் (இறந்த,நிகழ்,எதிர்),சுட்டுப் பெயர்கள்,எழுவாய் செயப்படு பொருள் பயனிலை,இணைப்புச் சொற்கள்,செய்வினை, செயற்பாட்டுவினை,உடன்பாடு எதிர்மறை,லாஸிம் முதஅத்தி, முழாப் முழாப் இலைகி,மஸ்தர்<br>• வினா அமைப்பு வசனம், இன்ன வஅஹவாதுஹா, கான வஅஹவாதுஹா, இடவாகு பெயர், கால வாகுபெயர் | 50 |

## பாடத்திட்டம்-தரம் 13

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **6.0 மொழியைப் பிழையில்லாமல் கையாளுவார்** | 6.1 தெளிவாகவும் பொருத்தமாகவும் பேசுவார் | • தொலைபேசி உரையாடல்<br>• வினாக்களுக்கு விடை கூறல்<br>• எண்ணக் கருக்களை வெளியிடல்<br>• மேடைகளில் பேசுதல் | 20 |
| | 6.2 பிறர் உரையாற்றுவதை செவி மடுத்துக் கேட்பார் | • வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கேட்டல்<br>• சொற்பொழிவுகளைக் கேட்டல்<br>• பாடல்களைக் கேட்டு விளங்கல் | 20 |
| | 6.3 நல்ல ஆக்கங்களை தெரிந்தெடுத்து வாசிப்பார் | • வாசிப்பதற்கு பொருத்தமான ஆக்கங்களை தெரிந்தெடுத்தல்<br>• ஆக்கங்களை வாசித்து குறிப்பெழுதல்<br>• ஆக்கங்களை வாசித்து அவை தொடர்பாக தமது கருத்துக்களை வெளியிடுதல் | 20 |
| | 6.4 பல்வேறு ஆக்கங்களை சுயமாக எழுதுவார் | • கதைகள்<br>• கட்டுரைகள்<br>• கவிதைகள்<br>• உரையாடல்கள் | 20 |
| **7.0 மொழியைக் கற்பதில் தொடராக ஈடுபடுவார்** | 7.1 அறபு மொழியில் பேசப்படுவதை அவதானமாகக் கேட்பார் | • வானொலி நிகழ்சிகள்<br>• இறுவட்டுக்கள் | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 7.2 அறபு மொழியில் கருத்துப் பரிமாறுவார் | • சந்தையில்<br>• தபாலகத்தில்<br>• வங்கியில்<br>• விமான நிலையத்தில்<br>• மருத்துவமனையில்<br>• பொலிஸ் நிலையத்தில் | 20 |
| | 7.3 அறபு மொழியிலான ஆக்கங்களை வாசிப்பார் | • பாடநூல்கள்<br>• சிறுவர் நூல்கள்<br>• பத்திரிகைகள்<br>• சஞ்சிகைகள் | 25 |
| | 7.4 தேவைக்கேற்ப சுயமாக எழுத்தாக்கங்களைப் படைப்பார் | • அழைப்பிதழ்<br>• கடிதம் (உறவுமுறை,கடமைசார், வர்த்தகம் சார்)<br>• அறபுக்கதைகள்<br>• அறபு சிறுவர் பாடல்கள்<br>• துணுக்குகள் /விடுகதைகள்<br>• துண்டுப்பிரசுரங்கள்<br>• கட்டுரைகள் | 25 |
| **8.0 மொழி பெயர்ப்பு முயற்சியில் ஈடுபடுவார்** | 8.1 சொற்களையும் வசனங்களையும் மொழி பெயர்ப்பார் | • பாட நூல்களில் வருபவை<br>• அன்றாட வாழ்வில் பயன் படுத்துபவை | 15 |
| | 8.2 பந்திகளை மொழி பெயர்ப்பார் | • சிறு பந்திகள்<br>• பத்திரிகைச் செய்திகள்<br>• அறிவித்தல்கள்<br>• சிறு கவிதைகள் | 15 |
| | 8.3 கதை, கட்டுரை, கவிதை போன்ற ஆக்கங்களை மொழி பெயர்ப்பார் | • தெரிவு செய்யப்பட்டவை | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **9.0 இலக்கியங்களை சுவைத்து இன்புறுவார்** | 9.1 கவிதைகளைக் கேட்டு பொருளறிந்து பாடுவார் | • தெரிவு செய்யப்பட்ட பாடல்கள் | 10 |
| | 9.2 இலக்கிய ஆக்கங்களை வாசிப்பார் | • தெரிவு செய்யப்பட்ட புராதன இலக்கிய ஆக்கங்கள்<br>• தெரிவு செய்யப்பட்ட நவீன இலக்கிய ஆக்கங்கள் | 10 |
| | 9.3 இலக்கிய ஆக்கங்களை கற்றும் சுவைத்தும் நலனாய்வார் | • தெரிவு செய்யப்பட்ட இலக்கிய ஆக்கங்கள் | 15 |
| | 9.4 இலக்கியத்துக்கும் சமூகத்தக்குமிடையிலான உறவை விளக்கிச் சொல்வார் | • அறபு இலக்கிய பின்னணி<br>• அறபு இலக்கிய பண்புகள் | 10 |
| **10.0 அறபு இலக்கிய வரலாற்றை விளங்கி நயப்பார்** | 10.1 இலக்கிய வரலாற்றையும் படித்துச் சுவைப்பார் | • இஸ்லாத்துக்கு முற்பட்ட காலம்<br>• இஸ்லாத்துக்கு பிற்பட்ட காலம்<br>• நவீன காலம் | 20 |
| | 10.2 சுதேச மொழிகளில் அறபு மொழியின் செல்வாக்கை இனம் காண்பார் | • சொற்கள்<br>• கவிதைகள்<br>• சிறு கவிதைகள்<br>• வாக்கியத் தொடர்கள் | 15 |

# 4.0 கற்றல் கற்பித்தல் முறை

கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவு மட்டம் பயனுறுதிமிக்க கற்றல் கற்பித்தலிலேயே தங்கியுள்ளது. பயனுறுதிமிக்க கற்றல் கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில் கட்டுருவாக்கவியல் (constructivism) சிந்தனை மிகச் சிறப்பான ஓர் அம்சமாகும். மாணவர்கள் புதிய கருத்துக்கள், விடயங்கள் போன்றன பற்றித் தாமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலைக் கட்டியெழுப்புவதே இதன் பிரதான அடிப்படையாகும். மாணவர்களது ஆக்கத்திறன் கற்பகைத்திறன் தொடர்பாடல் திறன் சமூகத் திறன் என்பவற்றை வளர்த்துவிடக்கூடியதாக அறபு மொழி கற்றல் கற்பித்தல் இடம் பெற வேண்டும்.

குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்குகளினூடாக மாணவரது நடத்தையிலும் மொழித்திறனிலும் ஏற்படுகின்ற தெளிவானதும் நிலையானதுமான ஒரு மாற்றத்தை இலக்காகக் கொண்டு தேர்ச்சிகள் உருவாக்கப்படுகின்றன. மொழிப்பாடத்தைப் பொறுத்த மட்டில் மாணவர்களின் மொழித் திறன்கள் நான்கையும் வளர்த்து விடுவது மிக முக்கியமானதாகும்.

தேர்ச்சி மையக் கல்வியில் மாணவரின் ஈடுபாடு மிகைத்து நிற்கிறது. பாடத்திட்டத்தின் ஊடாக மாணவர் அடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற குறைந்தபட்ச அடைவு மட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்வது ஆசிரியரது கடமையாகும். மாணவரைச் சரியாக இனங்கண்டு கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவு மட்டத்தை எய்துவதற்கு வழி காண்பது ஆசிரியரது கடமையாகும்.

- **Modern literary Arabic** – David Cowan, S.chand and Company Ltd, New Dilhi
- العربية للناشئين الجزء الثاني - Ministry of Education, Kingdom of Saudi Arabia
- العربية للناشئين الجزء الثالث - Ministry of Education, Kingdom of Saudi Arabia
- دروس اللغة العربية الجزء الأول - Dr. Abdur Raheem, Islamic Foundation Trust, Chennai, India
- دروس اللغة العربية الجزء الثاني - Dr. Abdur Raheem, Islamic Foundation Trust, Chennai, India
- **அறபு மொழி இலக்கணமும் பயிற்சிகளும்**- எம்.ஏ.எம் மன்ஸூர், மீள்பார்வை வெளியீடு
- **அறபு மொழி இலக்கணமும் பயிற்சிகளும்**- எம்.ஏ.எம் மன்ஸூர், மீள்பார்வை வெளியீடு

# 5.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

எமது நாட்டுக் கலைத்திட்டம் பரீட்சையை இலக்காகக் கொண்ட ஏட்டுக் கல்விக்கு முதலிடம் வழங்கி நடைமுறைப்படுத்துகின்றமையால் திறன்களும் மனப்பாங்குகளும் நற்பழக்கங்களும் அரிதாகவே உருவாகும் நிலை காணப்படுகின்றது. இந்நிலைமையை நிவர்த்தி செய்வதற்குப் பொருத்தமான பின்னணி பாடசாலைகளில் உருவாகத் தக்க வகையில் பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இசைவு படுத்தப்படல் வேண்டும்.

அறபு மொழி பாடத்திட்டத்தினூடாக மாணவரின் மொழித் திறன்கள் நான்கையும் விருத்தி செய்து கொள்வதற்கு உதவுவதற்காக பாடசாலை மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படும் பல்வேறு பாடசாலை செயற்பாடுகளை துணையாகக் கொள்ளல் சிறந்ததாகும். இப்புதிய பாடத்திட்டத்தைப் பாடசாலையில் அமுல் படுத்துவதற்காக பின்வரும் இணைப் பாடச் செயற்பாடுகளை பாடசாலையில் மேற்கொள்ளலாம்.

1. அறபு மொழி மேம்பாட்டுக் கழகங்களையும் மொழி அறைகளையும் பாடசாலைகளில் ஏற்படுத்தல்.
2. புத்தாக்க செயற்திட்டங்களை உள்ளடக்கிய அறபு மொழித்தினம் / வாரம் போன்றவற்றை ஏற்படுத்தி போட்டிகள்,நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்படுத்தல்.
3. அறபு மொழியிலான நாடகங்கள், திரைப்படங்கள்,குறுந்திரைப்படங்கள் போன்றவற்றைப் பார்க்க/ செவி மடுக்க சந்தர்ப்பத்தை ஒழுங்கு செய்தல்.
4. அறபு மொழியிலான சுவரேடு கையெழுத்துப் பத்திரிகை போன்றவற்றை ஆரம்பித்து நடாத்தல்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானவையாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர் குழாத்தினதும் மாணவ மாணவியரதும் ஆர்வம் மிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும்.இதற்காக பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் அறிவையும் ஆலோசனைகளையும் பெற்றுப் பயனடையலாம்.

## 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு தவணைக்குமென நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள் என்பன உள்ளடங்கும் வகையில் கணிப்பீட்டுக்கருவிகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இப்பாடத்திட்டமானது தரம் 13 இன் இறுதியில் நடைபெறுகின்ற தேசிய மட்டக் கணிப்பீடான க.பொ.த உயர்தர பரீட்சைக்குரியதாகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் தேசிய மட்டத்தில் முதலாவது பரீட்சை 2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரத்தின் அமைப்பு, மாதிரி பற்றிய தேவையான விபரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும்.